உ

கடவுள் துணை.

NOV 1913
MADRAS

செந்தமிழ்

தொகுதி-கக.] பிரமாதீச ஹு புரட்டாசி மீ [பகுதி-கக.

Vol. XI. September—October. 1913. No. 11.

தமிழும் ஸம்ஸ்கிருதவுதவியும்.

Tamil and the influence of Sanskrit.

[௫௫௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

தமிழ்ப் பாஷைக்குச் செய்யவேண்டிய நமது கடமை.

இப்பொழுது ராஜபாஷையாய் வழங்கிவரும் ஆங்கிலமே, வழக்குப்பாஷையாகவும் செய்துவிட்டால், தமிழ்ப்பாஷைதானெதற்கு. இரண்டுபாஷைகளை வாசித்து வீண்காலம் கழிப்பதேன்? என்று சில உத்ஸாகபுருஷர்கள் தர்க்கிக்கக்கூடும்.

இங்கு முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதொன்றுண்டு. தமிழ்ப்பாஷையே மண்ணுலகினின்றும் மாண்டு, எல்லாம் ஆங்கிலமாய்ப் போய்விட்டால், அதனுல் நேரிடக்கூடிய சாதக பாதகங்களைப்பற்றி யாவது, அல்லது நமது தமிழுலகே மூழ்கிவிடுமென்பதைப் பற்றி யாவது இப்பொழுது விசாரிக்கப்புகவில்லை.

ஆனுல் அப்படி எல்லாம் ஆங்கிலமாய் நேரிடும்காலம் அசாத்யம் என்று தோன்றுகின்றது. தேசபாஷையாகவாவது, நியாயஸ்தலங்கள் முதலான ராஜஸ்தலங்களில் வ்யவஹாரபாஷையாகவாவது அல்லது ராஜாங்கக் கல்வியிலாகாவால் ஆதரிக்கப்படவாவது இல்லாது

*

நமது தமிழ்நாட்டில் இப்பொழுது வழங்கிவரும் தெலுங்கு, மஹாராஷ்ட்ரம், சௌராஷ்ட்ரம் என்னும் பாஷைகள் எவ்வளவோ வருஷங்களாகியும் வழக்கினின்றும் மறையவில்லையென்பது கவனிக்கத் தக்கது.

ஒரு தேசம் நல்லநிலைமைக்கு வரவேண்டுமானல், அதிலுள்ளோர் நல்லநிலைமையிலிருக்கவேண்டும். அதற்கு, கல்வியே ப்ரதானம் என்பது யாவரும் அங்கீகரித்த விஷயம். ஆகையால், தமிழ்நாடு விருத்தியடைய நமது நாட்டிலுள்ளோர் யாவரும் கற்றவர்களாயிருக்கவேண்டும். தமிழ்நாடுமுழுதும் ஆங்கிலபாஷையாய் முடிவது அசாத்யம் என்று முன்னமேயே கூறப்பட்டிருக்கின்றது.

ஆகையால், நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப் பாஷையை விட்டால் வேறு கதியில்லை. அன்ய பாஷைகள் படிப்பதில் யாருக்காவது ஆக்ஷேபணை யுண்டா? அல்ல! ஆனல் எல்லோரும் ஆங்கிலம் படிக்கப் புத்திமான்களாகவும், தனவான்களாகவும், இதர சௌகரியங்கள் வாய்ந்தவர்களாகவும் இருப்பார்களா? சாதாரணமாய் ஆங்கிலேய மாணுக்கர்களுக்கே, தங்கள் சொந்தப்பாஷையின் எழுத்துக் கூட்டலுக்கும் உச்சரிப்புக்குமுள்ள யாதொரு விதிக்கு முட்படாத அசம்பந்தங்களை அறிய ஆறுவருடங்களாவதாய்த் தெரியவருகிறது. தமிழ்ப்பாஷையைத் தாய்ப்பாஷையாய்க்கொண்ட நமக்குச் சுமார் 10-வருஷங்களாவது ஆகின்றன. அன்யபாஷையை 10 - வருஷம் கற்றபிறகுதான் அதிலுள்ள நூல்களை யாராய்ச்சிசெய்ய ஆரம்பிக்கவேண்டியிருக்கின்றது. ஆதலால், சுமார் 16 வயதுள்ள ஆங்கிலப் பையன் இவ்வுலக அமைப்பு, சரித்திரங்கள், சாஸ்த்ரங்கள் இவைகளில் எவ்வளவு அறிகின்றனே அவ்வளவு அறிய நமக்கு 20-வயதிற்கூட முடியவில்லை. அதற்குக்காரணம் தற்கால நாகரீகங்களுக்கும் லௌகிகங்களுக்கும் தக்க அவ்வுத்தமநூல்கள் நமது தமிழ்ப் பாஷையில் இயற்றப்படாதிருத்தலே. இக்குறைவை நிவர்த்திக்க வேண்டியது நாம் தமிழுக்குச் செய்யவேண்டிய முக்கியமான கடமை.

அன்யபாஷையினின்றும் மொழிபெயர்க்கவேண்டுமானல், அதன் கருத்துக்கிசைந்த பதங்கள் நமது தமிழிலும் இருக்க

வேண்டும். இல்லாவிடில் தாராளமாய்க் கடன்வாங்கவேண்டியது தான். கடன்வாங்குவதிலும், நமக்கு ஸம்ஸ்கிருதபாஷை வெகுகாலம் உதவிசெய்திருப்பதாலும், ஸம்ஸ்கிருத பதங்களைத் தமிழாக்குவ தற்கு இயல்பாகவே சுலபமான விதிகளிருப்பதாலும், வேறு பாஷை யினின்று கடன்வாங்குவதைப்பார்க்கிலும் நமது அடுத்தபாஷை யான ஸம்ஸ்கிருதத்திலிருந்து வாங்குவது கௌரவக்குறைவன்று. ஸம்ஸ்கிருத தாதுக்களைக்கொண்டு தக்க வார்த்தைகளும் பரிபாஷை களும் கற்பித்துக்கொள்ளவேண்டும்.

உதாரணம். 1-வது இங்கிலீஷ்,மீடர்=மானி, அதாவது அளக்கும் கருவி. இவ்விகுதியைக்கொண்டு வாயுமானி, ஜலமானி, தாபமானி, சுவாஸமானி, சதமானி, பலமானி என்றும், அதேமாதிரி மனிதநூல், ஜீவநூல், மனநூல், வில்வித்தை, ஸவப்னசாஸ்த்ரம், உடனூல் என்றும், ism என்றால் வாதம் என்று வைத்துக்கொண்டு, சுப வாதம், அணுவாதம், சூன்யவாதம் என்றும், Sphere என்றால் மண் டலம் என்று வைத்துக்கொண்டு வாயுமண்டலம், வர்ணமண்டலம் உஷ்ணமண்டலம், ஜோதிமண்டலம், சூர்யமண்டலம் என்றும், வார்த்தைகள் கற்பித்துக்கொள்ளலாம்.

2-வது இந்துதேசத்தில் அன்யபாஷைகளில் உபயோகித்து வரும் ஹிந்திமுதலான பதங்களை நாம் உபயோகிக்கலாம்.

3-வது ஸம்ஸ்க்ருதபதங்கள் கிடைப்பதரிதானால், லத்தீன், க்ரீக் தாதுக்களைக்கொண்டு, தமிழ்மொழி கற்பித்துக்கொள்ளலாம். இதில் இன்னொரு சௌகர்யம் உண்டு. லத்தீன் கரீக் என்பன ஸம்ஸ் க்ருதபாஷைக்குச் சம்பந்தமானவையாதலாலும், இப்பாஷைவார்த்தை களின் சிதைவுகளே ஐரோப்பிய சாஸ்த்ரபரிபாஷைகளாயிருக்கின் றனவாதலாலும், நாம் இவ்வாறுசெய்தால், நாம் கற்பிக்கும் பதங்கள் ஸம்ஸ்க்ருதம், லத்தீன், க்ரீக், ஆங்கில முதலிய மற்ற ஐரோப்பிய பாஷைச் சொற்களை யனுசரித்து அதிக வித்தியாசமில்லாமலே இருக்கும்.

உதாரணம். இங்கிலீஷில் centre (=மத்யம்) என்பது, க்ரீக்கில் கேந்த்ரான் என்றும், ஸம்ஸ்க்ருத ஜோதிஷத்தில் கேந்த்ரம்

என்றும், தமிழில் கேந்திரம் என்றும் வழங்குகின்றது. இப்படிப்பட்ட விசேஷபதங்களைச் சேகரிப்பதுடன் இம்மாதிரியே கூடியவரை புதுப்பதங்கள் கற்பித்துக்கொள்ளவும் வேண்டும்.

4-வது கடைசியாய் யாதொருகதியுமில்லாவிடில் ஆங்கிலேய வார்த்தைகளை அப்படியே உபயோகிக்க வேண்டியதுதான்.

உதாரணம். ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், லென்ஸ், கேஸ், கோர்ட், கோட், உயில் முதலானவார்த்தைகளே.

பந்தயவ்யாஸங்கள். (Competitive essays) இம்முயற்சி கைகூடுவதற்கு இன்னொரு உபாயம். தற்காலநாகரீகத்துக்கின்றியமையாதனவும் மேல்நாட்டார் உயர்நிலைமை யடைந்திருப்பதற்குக் காரணமுமாயுள்ள பௌதிகம் முதலான ப்ரக்ருதி சாஸ்த்ரங் (Natural sciences) களைப்பற்றியும் செல்வநூல், ஜனசமூஹநூல், ராஜதந்திரம், அரசாட்சி முதலானவைகளைப்பற்றியும் உபயபாஷா வித்வான்களாகிய தக்க சாஸ்த்ரஞ்ஞரைக்கொண்டு, பந்தயவ்யாஸங்கள் எழுதச்செய்து, அவர்களுக்குத்தக்க பரிசளித்து, அவ்வாறு ஓர் விதம் ஊக்கமுண்டாக்குதலாம். இது தவிர நமது கலாசாலைகளைச் சேர்ந்த சாஸ்தரவுபாத்யாயர்களைக்கொண்டு, அடிக்கடி பௌதிகம் முதலானவைகளின் சிலபாகங்களில் அதாவது ஜலப்பகுதி (Analysis of water) மின்ஸாரவுற்பத்தி முதலியவைகளைப்பற்றித் தமிழிலேயே உபந்யாஸங்கள் செய்யச்சொல்லவும்வேண்டும்.

ஆகையால் இவ்வித ஏற்பாடுகள் செய்து, அன்யபாஷைகளிலுள்ள அரியபெரிய நூல்கள் நமது தமிழ்ப் பாஷையிலும் இயற்றப்பட்டு, அவைகளின் சாதகங்களையும் நன்மைகளையும் நமது சிறுவர்களும் சுவற்பகாலத்தில், குறைந்த பொருட்செலவில் அடையும்படி செய்யவேண்டும்.

விலைகுறைவான புஸ்தகங்கள்:— மேற்கூறியவாறு இயற்றப்படும் புஸ்தகங்களும், இயல்பாகவே தற்காலத்தில் இருக்கும் புஸ்தகங்களும் ஏழைகள்முதல் சகல தரத்தாரும் வாங்கி வாசிக்குமாறு சொற்பவிலைக்கு ப்ரசுரமாகவேண்டும். ஓர் இங்கிலீஷ்ப் புத்தகசாலை சென்றால் 4, 5 வருஷங்களுக்குமுன், 4, 5 ரூபாவுக்குக் குறையாது

விற்றுக்கொண்டிருந்த அருமையான நூல்களெல்லாம், நல்ல கடிதத்தில் நல்ல கட்டிடத்துடன், ஆறு அணுமுதல் 12 அணுவுக்குள் வாங்கலாம். இதன் முக்யமான ரகஸ்ய மென்னவென்றால், ஒரு இங்கிலீஷ்ப்புஸ்தகம் வெளியாயிற்றென்றால், லக்ஷம்பேர்கள் வாங்கத் தயாராயிருப்பதால் அதன் விலையும் மிகக்குறைவாய் முடிகின்றது. நமது தமிழ் நாட்டில், தமிழ்ப்புஸ்தகம் கையிலெடுப்பதே கௌரவக் குறைவென்றிருக்கும் குறையை நீக்கி, அபூர்வக்ரந்தங்களையெல்லாம் எல்லோரும் வாங்குவார்களானால் அதன் விலையும் குறைந்து ஏழைகளுக்கும் வாங்கிப்படிப்பதற்கு ஹேதுவாகும்.

ஸர்வகலாசாலையும் தமிழும்:—தமிழ்ப்பாஷையானது கட்டாயப் பாஷையாயிருந்ததை யெடுத்ததும், அதை மறுபடி கட்டாயமாய்ச் செய்ய நமது ஸர்வகலாசபையார் மறுத்ததும் தமிழபிமானிகள் யாவரும் வருந்தத்தக்கதே. பிழைப்புக்கே மன்றாட்டமாய் (Struggle for existence) க்கிடக்கும் இக்காலத்தில், கல்வியிலாகாவிற்கூடக் கட்டாயமாய் நமது தாய்ப்பாஷையை நாம் வாசிக்காவிட்டால் எப்பொழுது வாசிக்கப்போகின்றோம். இதனால் தமிழ்ப்பாஷை நசித்துப் போகாவிடினும் அதன் கௌரவமும், உருவும் குலைந்துபோம். எல்லாம் ஆங்கிலமாய் முடியுங்காலம் எக்காலமோ? அதுவரை, உலகத்தின்கண்ணுள்ள அற்புதங்களைத் தமிழர்யாவரும் அறிய யாதொருமார்க்கமுமில்லாமலிருக்கின்றது. ஆங்கிலம்படித்த நமது தேசத்தார்க்குத் தமிழில், தாங்கள் கற்றவைகளை யியற்றப்போதுமான தமிழறிவு இல்லையாயின், அவர்கள் கற்றகல்வி அவர்களுடனே நசித்துப்போகின்றது. ஆகையால், தமிழபிமானிகள் யாவரும் நமது பாஷையை மறுபடி கட்டாயப்பாஷையாய் வைக்கும்படி ஏகோபித்து ராஜாங்கத்தாருக்கு ப்ரேரேபணைகள் செய்யவேண்டும்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
B. A. B. L.

NOV 1911

பொருளதிகார ஆராய்ச்சி.

(௩௪௧-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு மணஞ்செய்துகொண்டு இல்லறத்தில் ஒழுகுங்காலை, தலைவன், தலைவியைப்பிரிந்துசெல்வது, இன்ன இன்ன காரணங்களால் நிகழும் என்பது இனிக்கூறப்படும்.

களவினுள், தலைவியைப் பிரிதலே கூடாது என்பது இலக்கணமெனினும், கடிமணம் எய்தி, இல்லறத்தே ஒழுகுங்கால், தலைவன் காரணத்தால் தலைவியைப் பிரிவது தவறாகாது.

"கற்பினுட் டுறவே கடிவரை யின்றே"

என்றார் இறையனாரும். அஙஙனம் மனைவியைப்பிரிதல் கல்விகற்றல், நாடுகாத்தல், தூதுபோதல், அரசர்க் குதவிசெய்தல், பொருளீட்டல், பரத்தைவிருப்பு ஆகிய இவைபற்றி நிகழும். இதனை,

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"

"பொருள்வயிற் பிரிதலு மவர்வயி னுரித்தே"

எனத் தொல்காப்பியனாரும்,

"ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே"

என்று இறையனாரும் கூறியிருக்கின்றார்.

இதனுள் ஓதலிற்பிரிவை அதன்சிறப்புப்பற்றி முதலிலும், பரத்தையிற்பிரிவை அதன் தாழ்வுபற்றி ஈற்றிலும் வைத்துளார்.

இவற்றுள் பெரும்பாலும் ஓதலும் தூதும் அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியன என்பதும், நாடுகாத்தல் பகைமேற்சேறல் என்பவை

அரசர்க்கே சிறப்பாக உரிய என்பதும், வேந்தர்க்குக் குற்றேவல் செய்தல், பொருள்வயிற்பிரிதல் என்பன வணிகர், வேளாளர் இவர் கட்குரிய என்பதும், பரத்தையிற்பிரிவு எல்லார்க்கும் உரிய என்ப தும்,

* " அவற்றுள்
ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன "

† " வேந்தர்க் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றுங்கவ் விரண்டு மிழிந்தோர்க் குரிய "

‡ " பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும்
உரைத்தநால் வர்க்கு முரிய வாகும் "

என வரும் இலக்கணங்களால் அறியப்படும்.

இப்பிரிவுகள் இன்னாரின்னார்க்கு உரியவை என்பதைச் சிற் சில வேறுபாடுகளுடன் நம்பியகப்பொருளிலே 62-முதல் 79வரை யுள்ள சூத்திரங்களில் விரிவாகக் காணலாம்.

இவைபோன்ற பிரிவு மகளிர்மாட்டில்லையென்பது,

" முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை "

என்னும் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் ஓதல், தூது, பகை என் னும் இம்மூன்றுதன்மைபற்றி மகளிர், ஆடவரைப்பிரிந்துபோதல் வழக்கமில்லை என்பதனாற் பெறப்படும்.

அச்சூத்திரத்திற்கே முந்நீரென்பதற்குக் கடல் எனப் பொருள் கூறிக் கடலிற் கப்பல் ஏறிச் செல்வது தலைவிக்கு வழக்கமில்லை யென்று இரட்டுறமொழிதல் என்னும் உத்தியாற் பொருள்கூறலும் அமையும்.

இவ்விரண்டாமுரையாலே, பொருள்வயிற்பிரிதல் முதலியவற் றில் தலைவன், தலைவியை நாட்டின்கண்ணே உடன் அழைத்துப்

---

* தொல்காப்பியம்.

† இறையனாரகப்பொருள்.

‡ நம்பியகப்பொருள்.

போயினும், கடலின்கண்ணே கலத்திலேற்றிக்கொண்டுபோகான் என்பது போதரும்.

அந்தணரும் மனைவியிற்பிரிந்துசெல்லுங்காற் கடல்கடந்து செல்லார் என்பது நச்சினார்க்கினியர் கருத்து.

* " புலத்திற் சிறந்த புரிநூன் முதல்வர்க்குக்
கலத்திற் சேறல் கடனன் றென்ப "

என்பதிலக்கணம்.

ஆடவர் மகளிரொடு கடன்மேற்செல்லுதல் கடியப்பட்டவாறு போல, போர்க்களத்திற் பாசறைக்கண்ணும், அவர்கள் மகளிரொடு சேர்ந்திருத்தல் விலக்கப்பட்டது.

" எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார் "

எனத் தொல்காப்பியனாரும்,

" குலமட மாதரொடு கலமிசைச் சேறலும,
பாசறைச் சேறலும் பழுதென மொழிப"

என நாற்கவிராஜநம்பியும் கூறியிருக்கிறார்.

இனி, இத்தகைய பிரிவுக்கு எல்லை கூறுவோம்.

ஓதலிற்பிரிவாயின் அது மூன்றுவருஷங்களுக்குமேற்படாது; மற்றைப்பிரிவுகளெல்லாம் ஒருவருஷத்துக்குட்பட்டதாக வேண்டும். இவை,

" வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது "
" வேந்துறு தொழிலே யாண்டின தகமே "
" ஏனைப் பிரிவு மவ்வயி னிலையும் "

என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களால் அறியப்படும்.

இங்ஙனம் பிரிந்துசெல்லுமிடத்து, தலைவி யிரங்குதலன்றித் தலைவனும் இரங்குவான்; அங்ஙனம் மனம் அழுங்கிப் பின், தலைவியைத் தேற்றுவித்துத் தான் பிரிந்துசெல்வன். பட்டினப்பாலையில், தலைவன்

---

* நம்பியகப்பொருள்.

" முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே "

என்பதும், அதற்கு நச்சினார்க்கினியர் " 'வாரேன்' என்றான் அவளை ஆற்றுவித்துப் பிரிதல் கருதி. அது *'செலவிடை யழுங்கல் செல்லாமையன்றே, வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும்' என்பதனால் உணர்க." என உரைவிசேடங்காட்டிப் போந்ததும் இங்கு நோக்கற்பாலது.

அங்ஙனம் தலைவன் பிரிந்துழி, தலைவி அவன் வருமளவும், ஆற்றாது மனமழிந்துநிற்பத் தோழி அவளுக்குத் தலைவன்வரும்பருவம் இது என்பதும், பிறவுங்கூறித் தேறுதல்சொல்லுவள். மீண்டுவரும் தலைவனும் இடையில் எங்குந்தங்காது, மிக்கவேகமாகச்செல்லும் பரிமாபூட்டியதேரூர்ந்து கடுகி வந்தெய்துவன். முல்லைப்பாட்டில் வாயில்கள் தலைவன் திரும்பிவரும்போது அவன் தேரிற்பூட்டிய குதிரைகள் ஆரவாரித்தன என வியந்தமை இங்கு உணரற்பாலது.

பிரிவும் பிரிந்தபின் சேர்தலும் இத்தன்மையனவாக, இனித் தமிழிலக்கிய இலக்கணங்களில், தமிழர் நாகரீகத்துக்கே ஓர் இழுக்குத் தோன்றுமாறு மிகுதியாகக் காணப்படும் பரத்தையரைப்பற்றித் தொல்காப்பியத்திற் காணப்படுவனவற்றைச் சுருக்கியுரைப்பாம்.

பரத்தையர், காமக்கிழத்தியர் என்றும், காதற்பரத்தையர் என்றும் இருதிறத்தவராவர். இவர்களுள், "காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக்கிழமைபூண்டு இல்லறநிகழ்த்தும் பரத்தையர்; அவர் பலராதலிற் பன்மையாற் கூறினார். அவர், தலைவன் இளமைப்பருவத்திற்கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்றொழுகப்படும் இளமைப்பருவத்தோரும், இடைநிலைப்பருவத்தோரும், காமஞ்சாலா இளமைப்பருவத்தோரும் எனப் பலபகுதியாம். இவரைக் கண்ணிய காமக்கிழத்தியர் எனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர், கூத்தும் பாட்டும் உடையராகிவரும் சேரிப்பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும்...பிறருமாம்" என நச்சினார்க்கினியர் "புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும்" என்னும்

* தொல்காப்பியம். பொருளதிகாரம். சூத்திரம் 185.

சூத்திரத்தின் உரையில் எழுதியதனால், தலைமகன், தலைவி யொருத்தி மாட்டே காமவின்பம் நுகரும் இலக்கணமுடையவனல்லன் என்பது போதரும்.

இது, "காதற் பரத்தை யெல்லார்க்கும் உரித்தே" என்னும் இறையனார்சூத்திரத்தானும் பெறப்படும்.

தலைவன், பரத்தையிடஞ்சேர்தல்பற்றித் தலைவி வருந்துதலும், தலைவன் திரும்பிவந்தவிடத்து அவனோடு ஊடலும், அவ்வூடல் தவிர்ப்பதற்கு வாயில்களாக * "தோழி தாயே பார்ப்பான் பாங்கன், பாணன் பாடினி யிளையர் விருந்தினர், கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்" இவர்களைப்போக்கித் தலைவியினது ஊடலைநீக்கத் தலைவன் முயலுவதும், பிறவும் இலக்கணத்தில் மிக்கவிரிவுடன் கூறப்பட்டுள்ளன. இவற்றால் அக்காலத்துப் பரத்தையர் மிகுந்திருந்தனர் என்பது எளிதில் உணர்ந்துகொள்ளற்பாலது.

மற்றும், ஜீவகசிந்தாமணியிலும், பிற வருணனைநூல்களிலும் பரத்தையர்சேரிவருணனையை, நகரப்படலத்தின்கண்ணேவைத்திருப்பதும், பரத்தையர் செல்வாக்கு எத்துணைதூரம் சென்றிருந்ததென்பதனை வெள்ளிடைமலையென விளக்கிக்காட்டும்.

இவற்றால் தலைவன் பலபெண்களைக் கூடுதல் கூறிய இலக்கணத்துக்கு அக்காலத்தில் மாறுகவில்லை என்பது போதரும்.

இங்ஙனம் வரையறையின்றித் தலைமகன் ஒழுகல் சாலுமோ எனின்,

> " புதல்வற் பயந்த புனிறுசேர் பொழுதிற்
> ......சேர்தற் கண்ணும் "

என்பதற்குச் "சேர்தல் கூறவே, கருப்பம் முதிர்ந்தகாலத்துத் தலைவன் பிறரோடு கூட்ட முண்மையும் கூறிற்றாம்" என்று நச்சினார்க்கினியர் உரைகூறியதால், அங்ஙனம் தலைவன் பிறருடன்கூடியது, தலைவி தன்னோடு காமவின்பம் நுகர்தற்கு இயலாதிருந்தகாலத்தில் என்று ஒருவாற்றாற் சமாதானங்கூறலாமெனினும், நாகரீகமுறைபற்றி ஆராய்வுழி, அது குற்றமுடைத்தேயாம்.

---

* தொல்காப்பியம்.

மற்றும், "பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத், தொன்முறை மனைவி யெதிர்ப்பா டாயினும்" என்னும் சூத்திரத்தில், தலைவனுக்கு "தொன்முறைமனைவி யிருப்பவும், பின்முறையாக்கிய" வதுவையும் உண்டு என்பது போதரும். அதனை, இச்சூத்திரத்துரையிலே நச்சினார்க்கினியர் "அந்தணர்க்குப் பின்முறை மூன்றும், அரசர்க்கிரண்டும், வணிகர்க்கொன்றும் நிகழ்த்தல்வேண்டுமென வேதநூல் கூறிற்றென்பது" எனக்கூறியிருப்பதனாலும் உணரலாம்.

இனி இறையனாரகப்பொருளில், தலைமகள் ஊடியவழித் தோழி அவ்வூடல் தவிர்ப்பாள் "அல்லதூஉம் வண்டோரனையர் ஆடவர். பூவோரனையர் மகளிர் என்பது, என்னை? வண்டுகள் தாதூதுமிடத்து நன்மலரே ஊதுவே மென்னா; எல்லாமலரும் ஊதும். இனிப் பூ அவாவினக்கால், எம்மையே ஊதா, எல்லாப் பூவையும் ஊதினவென்று புலவாதன்றே; அதுபோல வழிபடுதலல்லது மலைத்தற்கண்ணேம் அல்லேம்" என உரையிற் காணப்படுவதும், அக்காலத்துத் தமிழரில் ஆடவர் 'ஏகபத்னிவிரதம்' பூண்டவர்கள் அல்லர் என்பதற்குப் போதிய சான்றாகும்.

இது நிற்க:—இனித் தொல்காப்பியனார் தலைவன், தலைவி, செவிலி, தோழி, பரத்தை முதலியவர் இவ் விச்சமயத்திற் பேசுதல்வேண்டுமென்று கூறியிருப்பது உளநூற்கொள்கைக்கு ஒத்ததாகவேயிருக்கிறது. அவர் கூறியிருக்கும் இவ்விலக்கணங்கட்கு ஷேக்ஸ்பியர், காளிதாசர் முதலிய நாடகாசிரியர்கள் நூல்களிலிருந்து அப்படி அப்படியே உதாரணங்காட்டல் அமையும்.

மெய்ப்பாட்டியலின்கண் ஆசிரியர் "நகையே, அழுகை, இளிவரன், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை" என்னும் இவ்வுணர்ச்சிகளினது இயல்பினையும், அவை எவ்வெக்காலத்து நிகழும் என்பதையும், அவை அகத்தேநிகழுங்காலத்துப் புறத்தே எவ்வெக்குறிகள் தோன்றுமென்பதனையும் மிக அழகாக விரித்துச் சொல்லியிருக்கிறார். இம்மெய்ப்பாட்டுவிரிவெல்லாம் நூல்வாயிலாக உணர்ந்துகோடற்கியலாதென்றும், கண்ணானும் செவியானும் நன்கு அறிந்துகொள்ளும் அறிவுடையார்க்கே விளங்கும் என்றும்,

"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

என்னும் புறனடைச் சூத்திரத்தால் விளக்கிப்போந்தனர்.

இங்ஙனம் விரிவாக இல்லறநிலைக்கு இலக்கணம்வகுத்தவர், அவ்வில்லறம் எதனோடு முடிவுபெறும் என்பதனைக் கூறுமற்போகவில்லை.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்னும் சூத்திரத்தால் தலைவனும், தலைவியும் காமவின்பம் வேண்டுமளவு நுகர்ந்து, அதன்கண் வெறுப்புற்றவராய், வீடுபேற்றிற்குச் சிறந்தகருவியாகிய துறவினை மேற்கொள்வர் என்பது கூறினார். இதனுரையின்கண்ணே நச்சினார்க்கினியரும் "ஏமஞ்சான்றவாவன, வானப்பிரத்தமும் சன்னியாசமும் எனவே இல்லறத்தின்பின்னர் இவற்றின்கண்ணே நின்று பின்னர் மெய்யுணர்ந்து வீடுபெறுப என்றார்" என்று விரித்துரைத்தனர்.

இதுகாறும், களவின்கண், தெய்வசங்கற்பத்தால் எதிர்ப்பட்ட தலைவன் தலைவியர் இயற்கைப்புணர்ச்சி நிகழ்த்தியது முதலாக, அவர் துறவு பூண்டு வீடுபேற்றிற்குரிய முயற்சிசெய்வதீறாக அகப்பொருள் விஷயமெல்லாம் தொல்காப்பிய இலக்கணங் கருவியாகக்கொண்டு தொகுத்துக் கூறினோம். இனிப் பொருளின் மற்றைப்பகுதியாகிய "புறப்பொருள்" இலக்கணத்தினை ஆராய்வோம்.

(தொடரும்.)

வே. முத்துஸாமி ஐயன்.

ஆக்கச்சொல்விளக்கம்.

செந்தமிழ் 11-ஆந் தொகுதி 3-ஆம் பகுதியிலே வெளியிடப் பெற்ற 'ஐயவினவுக்குவிடை' யென்பதிலே இயைபுத்தொடைவிகற் பங்களை இனிது விளங்கக்கூறினர் யாழ்ப்பாணத்துச் சுன்னகப் பதியுடையாரும் இருபெரு மொழியினும் 'நுண்மாணுழைபுலன்' மிக்காருமாகிய அ. குமாரசுவாமிப்புலவர் என்பார். அதன்மேல் அவர் விரும்பியவாறு 'தாமின்புறுவதுலகின்புறக்கண்டு காமுறூஉம்' இயல்பினையுடைய நம் பத்திராதிபரும் பொருட்செறிவுள்ளதோர் முடிவுரைகூறி அவ்வுரைமாண்பை நன்குவிளக்கினர். அவ்விரண் டுரையுங் கற்றோரான் மிகப் பாராட்டப்படுவனவேயாம். அது நிற்க, 'சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்' என்று ஆசிரி யர் முடிவின்கண் ஆணைதந்ததுகொண்டு, புலவர் பொச்சாப்பு என்னுஞ் சொல்லைப் பகுத்துக்காட்டிப் பதமுடிபிலக்கணமென்க் கூறியதிலேமாத்திரம் எமக்குச் சிறிது கருத்துமாறுபாடுளதாயிற்று. பத்திராதிபரும் அதுபற்றித் தம் முடிவுரை வார்தல்செய்யாது வாளா விருந்தமையின், அவர்க்குங் கருத்துவேறுமென்பதே குறிப்பா யிற்று. ஆகவே உண்மைப்பொருளை தேர்தற்கருத்தால் எங் கருத்தை யீண்டு வெளியிடுகின்றும். நடுவுநிலைமையினையுடைய அறி ஞர் தங்கருத்துக்குப் பொருந்தாததனை யொழித்துப் பொருந்துவ தொன்றனை உவந்துகொள்வாராக.

இனி, அவர் பதமுடிபுகாட்டியவாறு:—"விம்மல்+ஆப்பு - விம் மாப்பு எனவும், ஏமம்+ஆப்பு - ஏமாப்பு எனவும் புணர்ந்துநின்றது போலப் பொச்சம்+ஆப்பு - பொச்சாப்பு எனப் புணர்தலாயிற்று என அநுமிதிபெறுகின்றும். பொச்சம் - பொய்புடையது. பொய் - உள்ளீடில்லது. (பொந்துபோன்றிருப்பது.) பிங்கலநூலாரும் பொய் என்பதனை மரப்பொந்தின்பெயர்களுள் ஒன்றாக வைப்பர். ஆப்பு - ஆதல். 'சிதைவின்றி யெச்சத்திற் கேமாப்புடைத்து' என்புழி ஆப்பு ஆதல் என்னும் பொருட்டாதல் அறிக. பொச்சாப்பு உள்ளீடி லதாதல்".

"கவர்+பு - கப்பு எனவும், உவர்+பு - உப்பு எனவும் விகாரப் பட்டு முடிந்ததுபோலப் பொய்+சு என்பனவும் விகாரப்பட்டுப் பொச்சு என முடிந்து பின்னர் அம்முப் பெற்றுப் பொச்சம் என நிற்பதாயிற்று. கப்பு=கவருடையது. 'கப்புடைநாவினுகருலகமும் (கம்பர்) உப்பு=உவருடையது" என்பது.

இவ்வாறு அவர் பதமுடிபுகாட்டியதற்கு ஏதுவாக இருந்த தெல்லாம், ஆண்டு அவர் சொற்சோதனைகாட்டிய 'செப்பமுடையவ னுக்கஞ் சிதைவின்றி, யெச்சத்திற் கேமாப்புடைத்து' என்னுந் திருக் குறளுரையிலே, ஆசிரியர் பரிமேலழகர் 'ஏமாப்புடைத்து' என் பதற்கு 'வலியாதலையுடைத்து' என்று பொருள்கூறியதுபற்றி, 'வலியாதல்' என்னும் இருசொற்பொருளையுந் தந்தது 'ஏமாப்பு' எனவும், 'ஏமம்' என்னுஞ் சொல்லே வலியை யுணர்த்துமாகலின் 'ஆதல்' என்பதை 'ஆப்பு' என்பதோர் சொல் உணர்த்திற்றாகல் வேண்டும் எனவும், ஏமம் ஆப்பு என்று இரண்டுசொற்கள்கூடி ஏமாப்பு என்பதாயிற்று எனவும் தாங்கொண்ட கருத்தேயாம் என்று அறியப்படும். உரையாசிரியர் பரிமேலழகர் கருத்தினை ஆராய்வோ மானால் அதனின் வேறுதல் காணப்படும். அம்மொழிமுடிபின் வரன் முறையும் ஆராயுங்கால் வேறேயாம்.

ஏமாப்பு என்பதனுள் ஆப்பு ஆதல் என்று உரைத்ததனால் அது காப்பு கலப்பு என்றாற்போலப் புவ்விகுதிபெற்ற தொழிற்பெய ரென்றல் அவர்கருத்துப்போலும். ஆ என்பது பகுதியாகத் தொழிற் பெயர் ஆதல் ஆகல் ஆகை ஆக்கம் என வருதலன்றி ஆப்பு என வருதல் யாண்டுமின்மையின் அது பொருந்தாதென்க.

அன்றியும், ஆ வென்பது பகுதியாக ஆனான், ஆகி, ஆகிய, ஆதல், ஆனவன் என ஐவகைச்சொற்களும் வருமாதலால், ஏமம் என்பது விகாரப்பட்டு ஏம் என நின்றதனோடு அது தொடர்ந்து வரு வழியும் அவ்வாய்பாடே பற்றி ஏமானான், ஏமாகி, ஏமாகிய, ஏமா தல், ஏமானவன் என வரல்வேண்டும். அங்ஙனம் வருதலின்றி ஏமாந்தான், ஏமாந்து, ஏமாந்த, ஏமாத்தல், ஏமாந்தவன் என வேறுபட்டே வருதலானும், ஆ என்பது பகுதியாக ஆந்தான், ஆந்து,

ஆந்த, ஆத்தல், ஆந்தவன் என வருதலின்மையானும் ஆ என்னும் வினைப்பகுதியே ஏமாப்பு என்னுஞ் சொல்லகத்தின்மை உணர்க.

இனி அப்பகுதி பொச்சு என்பதனோடு தொடர்ந்துவருவழியும் அவ்வாறே பொச்சானர், பொச்சாகி, பொச்சாகிய, பொச்சாதல், பொச்சானவன் என வரல்வேண்டும். அங்ஙனம் வருதலின்றிப் பொச்சாந்தவன் * என வேறுபட்டே வருதலான், பொச்சாப்பு என்னுஞ் சொல்லகத்தும் அவ்வினைப்பகுதியின்மை உணர்க.

இனி உரையாசிரியர் பரிமேலழகர்கருத்தினை ஆராய்வாம். ஏமாப்பென்னுஞ்சொல் மேற்குறித்த 'செப்பமுடையவனுக்கம்' என்னுங் குறள் ஒன்றிலேமட்டும் அருகிவந்த இயல்பினதன்று. தெய்வப் புலவர்நூலகத்து அது மிகப்பயின்றுவழங்கியதேயாம். ஏமம் என்னுஞ் சொல்லும் அத்தன்மையதே.

'ஒருமைபு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து'

'ஒருமையுட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து'

'குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து'

'மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து'

'மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து'

'இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பற்று விடும்'

என்னுங் குறள்களிலே ஏமாப்பு என்னுஞ்சொற் பயின்றுவந்தமை காண்க.

---

* எதிர்மறையிலே பொச்சாவார், பொச்சாவாது, பொச்சாவாத பொச்சாவாமை, என வருதலுங்காண்க.

'மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு'

'செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று'

'காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி'

'இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பாரி லானுங் கெடும்'

'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்'

'சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று'

என்னுங் குறள்களிலே ஏமம் என்னுஞ்சொற் பயின்றுவந்தமை காண்க.

இங்ஙனம் இவ்விருசொல்வழக்கும் நூலுட்பயின்றுவந்தமை கண்டு அவற்றின்பொருள் நன்குதேர்ந்து உரைவிரித்த பரிமேலழகர்க்குப், புலவர் கூறுமாறு ஏமாப்பு என்பது ஏமம் ஆப்பு என்று இரண்டு சொற்கூடியாயிற்று என்பது கருத்தாயின், அஃது அத்தன்மைத்தென்று அகலவுரையுள் இலக்கணக்குறிப்பிற் கூறாது செல்லார். ஆசிரியர்கருத்துக் கரதலாமலகமெனவிளங்கப் பொருள்விரித்தலானும், ஆண்டு அமைந்துகிடந்த அரிய பல விலக்கணங்களையெல்லாம் எடுத்துக்காட்டி விளக்குதலானும், அவர் பண்டையுரையாசிரியர் பலருள்ளுஞ் சிறந்தார் என்ப. அப்பெருமான் தமிழ்மறையுட் காணப்படுஞ் சொற்களுள்ளே இருசொல்லாயினும் ஒருசொல்லின் தன்மையை எய்திநின்றவிடத்து, இஃது ஒருசொன்னீர்மைத்து என்றும், இருசொற்போலத் தோன்றினும் ஒருசொல்லேயாயவிடத்து இஃது ஒருசொல் என்றும் விசேடவுரையிலே இலக்கணங் குறித்துச்செல்வது நியமம்.

'நயனீன்று நன்றி பயக்கும்' என்னுங் குறளில் 'தலைப்பிரிதல்' என்பதும், 'ஒறுத்தாற்றும் பண்பினார்' என்னுங் குறளில் 'ஒறுத்தாற்றும்' 'பொறுத்தாற்றும்' என்பனவும், 'ஓஒதல் வேண்டும்' என்னுங் குறளில் 'ஓஒதல்வேண்டும்' என்பதும், 'விழைதகையான்' என்னுங் குறளில் 'வேண்டியிருப்பர்' என்பதும், அதுபற்றிச் சொற்சோதனைகாட்டிய 'எழுந்திருப்பர்' என்பதும், 'நோனாவுடம்பு' என்னுங் குறளில் 'நீக்கிநிறுத்து' என்பதும் ஒருசொன்னீர்மைய வென்றுகூறினார்.

'அடக்கமமரருளுய்க்கும்' என்னுங் குறளில் 'உய்த்துவிடும்' என்பதும், அதுபற்றிச் சொற்சோதனைகாட்டிய 'பிறந்துவிடும்' என்பதும், 'சிறுபடையான்' என்னுங் குறளில் 'அழிந்துவிடும்' என்பதும், 'யாகாவாராயினும்' என்னுங் குறளிற் 'சோகாப்பர்' என்பதும், சொற்சோதனைகாட்டிய 'அல்லாப்பர்' 'செம்மாப்பர்' என்பனவும், 'மலர்காணின்மையாத்தி' என்னுங் குறளில், 'மையாத்தல்' என்பதும், சொற்சோதனைகாட்டிய 'இறுமாத்தல்' 'செம்மாத்தல்' என்பனவும், 'தக்காங்கு நாடி' என்னுங் குறளில் 'தக்காங்கு' 'ஒத்தாங்கு' என்பனவும், 'இலக்கமுடம் பிடும்பைக்கு' என்னுங் குறளிற் 'கையாறு' என்பதும், 'அழுக்காறுமை' என்புழி 'அழுக்காறு' என்பதும் ஒருசொல்லென்றுகூறினார்.

இவ் வியல்புபற்றி நக்கீரரும் 'சேட்படநிறுத்தல் என்பது நீக்கி நிறுத்தார், உய்ந்துவிட்டார், போக்கிவிட்டார் என்பனபோல ஒருசொல்விழுக்காடுபடநின்றது' என்று இறையனார்களவியலுரையுட் கூறியவாறும் அறிக.

இன்னும் இவ் வியல்பை ஆசிரியர் சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியுள்ளே 'எனப்படுப' என்பதற்கு இலக்கணங்கூறுழி விளக்கிக்காட்டியவாற்றானும் உணர்ந்துகொள்க.

இனி யொருசாராசிரியர் பல சொற்றொடர்களையும் ஒருசொன்னீர்மைய என்று உரைப்பாரும் உளர். அவர்கருத்துவேறாகலின் ஈண்டு அதுபற்றி ஆராய்ச்சியின்று.

மேற்காட்டியவாறு இஃது ஒருசொன்னீர்மைத்து, இஃது ஒரு சொல்லென்று ஒருவாறு பதமுடிபிலக்கணங்கூறிச் செல்லும் உரையாசிரியர் பரிமேலழகர் இவ் வேமாப்பு என்னுஞ் சொற்பற்றியாதல் பொச்சாப்பு என்னுஞ் சொற்பற்றியாதல் இஃது ஒருசொன்னீர்மைத்து என்று யாண்டுங்கூறுமையால் அவை ஒருசொல்லென்பதில் அவர்க்கு மயக்கஞ் சிறிதுமின்மை அறிக.

அற்றேல், அவை ஒருசொல் என்றுயினும் இலக்கணந்தோன்றக் கூறல்வேண்டும். அதுவுமின்மையால் அவை ஒருசொன்னீர்மைய வென்பது பழுதாகாது எனின், நன்றுகூறினீர்! ஒருநிகரானவாகிய சொற்களுள்ளே ஒன்றற்கு யாதானுமோரிடத்திலே இலக்கணங்கூறி அதனை ஏனையவற்றுக்கும் உய்த்துணரவைத்துச்செல்வது அவர்க்கு நியமம். 'ஆக்கமிழந்தேமென்றல்லாவார்' 'செம்மாக்குங்கீழ்' 'உவப்பத்தலைக்கூடி' 'தீயுழியுய்த்துவிடும்' என்புழி அவ்வகையிலக்கணமே கூறுதொழிந்து, மேற்காட்டியவாறு அந்நிகரனசொற்பற்றிக் கூறிய இலக்கணத்தை ஆண்டும் உய்த்துணர்ந்துகொள்ள வைத்தமை காண்க. இவ்வாறு உய்த்துணரவைத்தல் உரையாசிரியரா யினார்க்கு இயல்பென்பதை 'உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே' என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையர் உரையானும் அறிக. ஆகவே, செம்மாப்பு, இறுமாப்பு முதலியன ஒருசொல்லெனக் கொண்ட அவர்க்கு, அவற்றோடொத்த இயல்பினவாகிய ஏமாப்பு பொச்சாப்பு என்பனவும் ஒருசொல்லென்பதன்றி ஒருசொன்னீர்மையவென்பது கருத்தாதல் யாண்டையதென்க.

அல்லதூஉம், 'சலத்தாற்பொருள்செய்தேமார்த்தல்' என்னுங் குறளுரையிலே, பிறரோதிய பாடமாகிய, 'ஏமாத்தல்' என்னுஞ் சொல்லையும் அதற்குப்பொருள் மகிழ்தல் என்பதையும் அங்கீகரித்துப் பின் அது தன்வினையென்றுகூறிப் பிறருரை பொருந்தாமை காட்டி மறுத்தார்; தாங்கொண்ட பாடமாகிய 'ஏமார்த்தல்' என்பதனை 'ஏமம் ஆர்த்தல்' என இருசொல்லாகப் பிரித்துக்காட்டி, அதற்கு ஏமத்தை அடையப்பண்ணுதல் என்று பொருளும் விரித்தார். அதனாலும் ஏமாத்தல் என்பதும், அதுபோலும் ஏமாப்பு என்பதும், ஒரு சொல்லென்பதும், ஏமம் ஆப்பு என இரண்டுசொல் ஒருசொன்னீர்மைப்

பட்டு ஏமாப்பு என வருமா றில்லையென்பதும் அவர்கருத்தாதல் தெளியப்படும் என்க.

அற்றேல், ஏமாப்பு என்னுஞ் சொற்குத்தான் பொருள் என்னை? ஏமாப்புடைத்து என்பதற்கு வலியாதலுடைத்தென ஆதல் என்னுஞ் சொல் விரித்துரைத்தவாறுதானும் என்னையோ வெனின், 'எச்சத்திற்கேமாப்புடைத்து' என்புழி 'ஏமாப்புடைத்து' என்பதற்கு 'வலியாதலுடைத்து' என்று உரைகூறியவர்தாமே 'மனநலத்தினூகு மறுமை' யென்புழி 'ஏமாப்புடைத்து' என்பதற்கு 'வலிபெறுதலை யுடைத்து' என்றும், 'ஒருமையுட்டான்கற்றகல்வி' என்புழி 'ஏமாப் புடைத்து' என்பதற்குச் 'சென்றுதவுதலையுடைத்து' என்றும் உரை விரித்தார். 'இரவென்னுமேமாப்பிறேணி' என்புழி 'ஏமாப்பில்' என் பதற்குச் 'சேமமற்ற' என்று பொருள்கூறினர். 'ஒருமையுளாமை போல்' என்புழி 'ஏமாப்புடைத்து' என்பதற்கு 'அரணுதலையுடைத்து' என்று பொருள்விரித்து, அதுபோலவே 'மறமானமாண்டவழிச் செலவு' என்புழி 'ஏமம்' என்பதற்கு 'அரணுவது' என்று பொருள் விரித்துரைத்தார். அதனுல் ஏமாப்பு என்பதற்கு வலி, உதவுதல், சேமம், அரண் என்பதே பொருள் என்பதும், பெறுதல் சென்று ஆவது என்னுஞ் சொற்கள்போல ஆதல் என்னுஞ்சொல் ஆண்டு வருவித்துரைக்கப்பட்டதென்பதும், ஏமாப்பு என்பதும் ஏமம் என் பதேபோல ஒரு தனிமொழியென்பதும், ஏமாப்பு ஏமம் என்பன அவ்வாற்றுன் ஒருபொருட்கிளவியென்பதும் துணிந்துகொள்ளப் படும் என்க.

பிங்கலநூலினும் 'ஏமாப்புச்செம்மாப்பு' எனவும், 'இன்பமு நீறும் பொன்னுங் காவலு - மிரவுஞ் சேமமு மேமாப்பு மயக்கமு - மென் பன ஏமப் பெயரன வாகும்,' எனவும் ஒத்துண்மை கண்டுணர்க.

இனிப் 'போச்சாப்பு' என்பதும் அவ்வாற்றுன் 'ஏமாப்பு' என்பதே போல ஒரு தனிமொழியென்பதும் தடையின்றிமுடிந்தவாறு கண்டு கொள்க. (இன்னும் வரும்)

நா. சோமசுந்தரம்பிள்ளை,

மன்னூர்குடி.

அந்தகக்கவிவீரராகவமுதலியார்காலம்.

(உஉசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"கைலாயமாலை" கூறுவதை இங்கே சற்றுவிரித்துரைத்தல் இன்றியமையாதது. (1) பண்டைக்காலத்தில் ஆரின்மாலையனும், காவிரித்தண்புனல் நாடனும், புலிக்கொடியோனும், சூரியகுலத் தோன்றலுமான ஒரு சோழவரசனது கன்னிமகளார் புண்ணிய தலங்களைத் தரிசித்தற்பொருட்டுத் தனதுபரிவாரங்களுடன் ஈழஞ் சென்று அத்தேயத்துள்ள *கடற்றீர்த்தத்தருகே தங்கலுற்றனளாக; அப்போழ்து சிங்கமுகத்தனை ஈழத்தரசன் இரவிலே அவ்வரசியைத் திருடித் தனது தலைநகரமாகிய "கதிரைமலை"க்குக்கொண்டுபோய் அங்கே அவளை மணஞ்செய்துவாழுங்காலத்தில் இவள் அவனுக்குப் பேரழகுவாய்ந்தவனும், வாலொன்றுள்ளவனுமான ஒரு குமாரனை யீன்றனள். இவனுக்கு "நரசிங்கராசன்" என்ற பெயரிட்டனர். பின்னர் அம்மாது ஒரு குமாரத்தியையும்பெற்றனள். பிள்ளைகள் வளர்ந்தபொழுது பெற்றோர் அவர்களிருவரையும் மணஞ்செய்து வைத்து அவர்களையே தங்களுக்குப்பின் சிங்காசனத்துக் குரித்தாளிகளாக நியமித்துவைத்தனர். யாழ்ப்பாடிப்புலவரொருவர் இந்த நரசிங்கவரசர்முன் பாடி அவரைமகிழ்வித்தபோது அவருடைய தேசத்தின் ஒருபாகத்தைப் பரிசாகப் பெற்றனர். அக்காலந் துவக்கம் இப்பாகம் "யாழ்ப்பாண"மென்று வழங்கப்பட்டது. யாழ்ப்பாணனார் அதிக பிரபலத்தோடு இத் தேயத்தையாண்டு பிள்ளையின்றியிறந்து போக அரசனில்லாமையால், தேசத்திற் பெருங்குழப்பங்கள் நடந்துகொண்டிருக்க "மழவன்" என்னு மொரு வேளாளன் மதுரைக்குச் சென்று "செழியசேகரன்"மகன் "ஜெகராசசிங்க ஆரிய"னென்பானை அவன்மந்திரியாகிய "புவனேகவாகு" என்பவனுடனே யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச்சென்று பட்டங்கட்டிவைக்க அவன் நல்லூரைக்கட்டி அந் நகரிலிருந்து அரசுபுரிந்தனன் என்பர்.

(1) Vide Appendix to the "Yalpana Vaipava Malai" English Translation by C. Brito Esq. p. 45.

* இது தற்காலம் "கீரிமலை"யென்று வழங்கப்படுகின்றது.

(1) மேற்குறித்த இலங்கையாசனை வைபவாசிரியர் "உக்கிர சிங்க"னென்று வழங்குகின்றார். இவன் "திசையுக்கிர"னென்னும் சோழன்மகள் "மாருதப்புரவீகவல்லி"யினது பேரெழிலால் இழுப் புண்டு அவளை இராக்காலத்திற் களவாய் எடுத்துக்கொண்டுபோயின னென்றும், முதலில் (2) "கதிரமலை"யிலிருந்து பின்பு "செங்கடக நகரி"யைத் தனக்கு இருப்பிடமாக்கினானென்றும் "வைபவங்" கூறும்.

(3) யாழ்ப்பாணச்சரித்திரத்திலே மேற்குறித்த "உக்கிரசிங்க" னுக்கும் அவன்பத்தினி மாருதப்புரவீகவல்லி"க்கும் பிறந்த ராஜ குமாரனுக்கு ஒருவாலோடு சிங்கமுகமும் இருந்ததாகக் கூறப்பட் டுள்ளது.

இனி, "கைலாயமாலை" சொல்வதிலிருந்து விளங்கக் கிடப்பன யாவெனில் யாழ்ப்பாடிக்குப் பரிசளித்த இலங்கையரசன் சிங்கள வரசனென்பதும், அவன் சோழவம்சத்தி லொருராஜஸ்திரீயை மணம் புரிந்தவனென்பதும், அவன் சிங்கவம்சபரம்பரையைச் சேர்ந்தவ னென்பதுமே. இவ்வரசன் சிங்களவரசனே யென்பது அவன் ராஜ தானி "செங்கடகநகரி"யென்று வைபவத்தார்கூறியிருத்தலானும் நன்குபுலப்படும். "செங்கடகநகரி"யென்றது "செங்கடகலபுரம்" என்று சிங்கள இதிகாசங்களில் வழங்கப்படும் "கண்டி" நகரத்தைக் குறிக்கும். இக்கருத்துக் கிசைய (4)"விரோதயசிங்க ஆரிய"னென் னும் யாழ்ப்பாணத்தரசன் "சந்திரசேகர"பாண்டியனுக் குதவி செய்யும்படி ஒரு பெருஞ்சேனையோடு மதுரைக்குச்சென்று அங்கே சிலகாலம் தங்கியிருக்கையில் வன்னியரென்னுஞ் சிற்றரசர் யாழ்ப் பாணத்தின்மேற் படையெடுத்தற்குக் "கண்டி"யிலிருந்த சிங்கள வரசனைக் கேட்பாராயினர். இவனே தனது முற்பிதாக்களிலொருவன் அந்தகயாழ்ப்பாடிக்குக் கொடுத்தபரிசைத் திரும்பப்பறித்தல் சரி

(1) Vide idem p. 9.

(2) "அநுராசபுரத்"தைத் தமிழர் "கதிரமலை" அல்லது "கதிரகிரி"யென் றழைத்தன ரென்பது பிறிற்றோப்பிள்ளையவர்களுடைய அபிப்பிராயம். Vide "Yalpana Vaipava Malai" "Glossary of foreign words" p. 3.

(3) Vide idem p. 31.

(4) Vide "Yalpana Vaipava Malai" English Translation by C. Brito Esq. pp. 20, 21.

யன்றெனவெண்ணி அக்கேள்விக் கிசையாதிருந்தனன் என்று "வைபவங்" கூறும்.

சிங்கள இதிகாசங்களில் இலங்கையரசர்வம்சோற்பத்தி பின் வருமாறு கூறப்பெற்றுள்ளது.

*அஃதாவது, வங்கதேசத்தரசனொருவனது ஏகபுத்திரி தன்னைப் பெற்றோரையும், தன்வீட்டையும் விட்டு மகததேசத்துக்குப்போகும் சில வணிகரோடு ஓடிப்போகும்பொழுது, வழியில் "லால"தேசத்தி லுள்ள ஒரு காட்டிலே சிங்கமொன்று அவளது பேரழகில் மருண்டு அவளைக் கவ்விச்சென்று தன் குகைக்குள்வைத்து அவளோடு வாழ்ந்துவருங்காலத்தில் இப்பெண் அம் மிருகேந்திரனுக்கு ஒரு குமாரனையும், ஒரு குமாரத்தியையும் பெற்றனள். இச் சிசுக்க ளுடைய கைகளுங் கால்களுந் தந்தையாரதுகுலத்தைக் காட்டுவன வாய்க் கோளரியின்கைகால்களை ஒத்திருந்தன. இந் நரசிங்கபால கருக்கு "சிங்கவாகு" "சிங்கவல்லி" என்னும் நாமங்கள் கொடுக்கப் பட்டன. இவர்கள் பெரியவர்களானபோது "லால" என்னுந் தேசத்திற் "சிங்கபுர"மென்னும் நகரத்தைக் கட்டினரென்றும், "சிங்கவாகு"தன் சகோதரியாகிய "சிங்கவல்லி"யைத் தனக்கு மனைவி யாகக்கொண்டனனென்றும், சிங்களவரசர்வரிசையில் முதலானவ னாகிய "விஜயன்" என்பான் இந்த நரசிங்கருடைய முதற்பேறானவ னென்றும் இலங்கையிதிகாசங்களிற் சொல்லப்பட்டுள்ளது. இவ் "விஜய"னே தன் பரிவாரங்களோடு இலங்கைக்குவந்து இயக்கரை அடக்கிப் பின் "தக்கணமதுரை"க் கோமான் தமிழ்ப் பாண்டியனது மகளை மணம்புரிந்து சந்தானமின்றியிறக்க "விஜய"னுக்கு மந்திரியா யிருந்த "உபத்திசை" என்போன் சில்லாண்டுகளாய் ராஜ்யபரிபால னஞ்செய்து பின் "விஜயன்" தம்பிமகனான "பாண்டுவசதேவ" னென்பானிடம் செங்கோலையீந்தனனென்ப.

† இற்றைக்கு முந்நூறுவருடங்களுக்குமுன்னே "கொன்ரோ" என்னும் போர்த்துக்கீசபண்டிதர் எழுதின இலங்கைச்சரித்திரக்

---

* Vide "Mahawamsa" English Translation by Vijayasingha Mudaliar Chapter on "Vijaya"

† Vide—"Journal of The Royal Asiatic Society" Ceylon Branch Volume XX pp. 62, 63.

குறிப்புகளிலே ஈழத்தரசன் "விஜய"னென்போன் அயோத்தியை ஆண்ட வொரு பேரரசன்மகனென்றும், இவன் இலங்கைக்குவந்து முதலில் "மாந்தை"ப்பகுதியில் ஒரு பட்டினத்தைக் கட்டினு னென்றும், ஒரு சோழவரசனுடையபுத்திரியை மணஞ்செய்தா னென்றுங் கூறப்பட்டுள்ளது விசேஷ கவனிப்புக் குரியது. சிங்கள இதிகாசங்களின்படி "விஜயன்" பாண்டியன்மகளைத் தன்மனைவி யாகக் கொண்டவன். அவன்தகப்பன் சிங்கபுரத்தரசன். ஆகவே "கொன்ரோ"என்பவர் எழுதிவைத்தது ஏட்டிற் படித்தறிந்த சிங்களக் கலைவல்லோரிடங் கேட்டறிந்த தல்லவென்பது தெற்றனவிளங்கும்; ஊர்க்கதையேயாம் எனக் கொள்க. இலங்கைத்தீவின் முதலரசன் அயோத்திநகரத்து அரசவம்சத்தைச் சேர்ந்தவனென்றும், அவன் சோழவம்சத் தொரு ராஜஸ்திரீயை மணம்புரிந்தவனென்றும் ஒரு கதை சாமானியஜனங்களுக்குட் பரவியிருந்திருத்தல்வேண்டும். அதையே கொன்ரோ கேட்டெழுதிவைத்தார்போலும்.

* "வைபவமாலை"யிலே "உக்கிரசிங்க மகாராசன்" ஈழத்தரசன் "விஜய" னென்பவனுடைய தம்பியின்வம்சத்தவனென்றும், "விஜயன்" வம்சத்தார் நெடுங்காலமாக இழந்துவிட்ட இலங்கைத்தீவின் வடபாகத்தைப் பெருஞ்சண்டைசெய்து பிடித்தவனென்றும் சொல்லி யிருப்பதோடு, சிங்கள இதிகாசங்களில் "விஜயன்" இறந்த பின்னர்ப் பலவருடங்களாக அவன்மந்திரி † "உபதிஸை" என்பானுடைய ஆட்சிக்குள்ளான அநுராசபுரப்பிரதேசத்தை அவன்தம்பிமகன் "பாண்டுவசதேவன்" கைப்பற்றினுனென்று சொல்லியிருப்பதை ஒத் துப்பார்க்குங்கால் இவ்விருகதைகளுக் கிடையிலுள்ள ஒற்றுமை பிரத்தியக்ஷமன்றே!. மேலும் யாழ்ப்பாணத்தையாண்ட முதலரசன் அயோத்திநகரத்திலிருந்து வந்தவனென்றும், ஒரு சோழன்மகளை மணம்புரிந்தவனென்றும், யாழ்ப்பாடிக்கு ஈழத்துவடபாகத்தைப் பரிசளித்தவனென்றும், "வைபவ"த்திற் சொல்லியிருக்கும் "வாராச சிங்க"னென்பான் ஒரு சோழன்மகளான "சாமதூத்தி"யென்பாளை

* Vide—"Yalpana Vaipava Malai" English Translation by C. Brito Esq. p. 8.

† Vide—"Mahawamsa" Chapter on "Panduwamsa Deva"

மணம்புரிந்தவனென்றும் "யாழ்ப்பாணச்சரித்திர"த்திற்கண்ட குறிப்புகள் * "விஜயராசன்" அயோத்தியர் வம்சத்தவனென்றும், ஒரு சோழன்மகளைத் தன் மனைவியாகக்கொண்டவனென்றும் சாமானிய சனங்களுக்குள் வாய்ப்பேச்சாக "கொன்ரோ" காலத்திற் பரவியிருந்தகதையுடன் மிகப் பொருத்தமுடையவன்றோ. † இதற்கிணங்க "திருக்கோணசலபுராண" வாசிரியர் "உக்கிரசேனசிங்க" னென்பான் "திசையுக்கிர" சோழன்மகள் "மாருதப்புரவீகவல்லி" யென்பாளை மணஞ்செய்தனனாக, இவள் அவனுக்கு "வரராசசிங்க" னென்னு மொருகுமாரனைச் சோழதேசத்திற் பெற்றாளென்றும், இந்த "வரராசசிங்கன்" இலங்கைக்கு வந்து அத்தேசத்துக்கரசனாகிப் பாண்டியன்மகள் "சாமதூத்தி"யை விவாகஞ்செய்து "செங்கடகநகரியி லிருந்து ராஜரீகஞ்செய்தனனென்றுங் கூறியிருக்கின்றார். இதுவும், "விஜயராசன்" "சிங்கவாகு"வின் மகனென்றும், வேற்றிடத்திருந்து வந்து இலங்கைக்கு அரசனானவனென்றும், பாண்டியன்மகளை மணம் புரிந்தவனென்றும், ஈழத்தில் அரசுசெய்த சிங்களவரசர்பரம்பரையைச் சேர்ந்தவனென்றும் "மகாவம்ச" முதலிய இதிகாசங்களிற் சொல்லியிருப்பவைகளோடு ஒத்திருத்தலை எளிதிற்காணலாம். "கோணசலபுராண"த்திற் காட்டப்பட்ட இக்கதையானது அவ்வூராருக்குள், பாம்பரையாய்வந்த ஒருபழம்பேச்சென்பதற் கையமின்று. ஆகவே "கைலாயமாலை" முதலிய நூல்களிற் சொல்லப்பட்டுள்ள சிங்ககுலத்தவரான "உக்கிரசிங்கன்" "வரராசசிங்கன்" என்பவர்கள் "மகாவம்ச"த்திற் சொல்லிய "சிங்கவாகு"வும், அவன்மகன் "விஜயனு"மே என்பது ஒருவாறுவிளங்கும். "கைலாயமாலை" யாசிரியர் தமதுகாலத்திலிருந்த படிப்பறியாத நாட்டுமனிதர் நேரப்போக்காய் உளறிவந்த ஒருகதையினைச் செய்யுளில் அமைத்தனர். அக்கதை மெய்யோ பொய்யோவெனச் சிறிதும் ஆராய்ந்தறிந்தவால்லர். சிறிதளவேனும் ஆராய்ந்தவராயின் அவர் எழுதியதற்கும் சிங்கள இதிகாசங்களிற் கண்டவற்றிற்கு முள்ள வேறுபாடுகள் நேர்ந்திருக்கமாட்டா. கலியுகாப்தம் 3000-ல் யாழ்ப்பாடிக்கு யாழ்ப்

* Vide—Appendix to the "Yalpana Vaipava Malai" English Translation by C. Brito Esq. pp. 30, 31.

† Vide idem. p. 30.

பாணமென்று பின்னர்வழங்கப்பட்டதேசங் கொடுக்கப்பட்டதென்று "கைலாயமாலை"யார் சொல்வதினால் இப்பரிசளித்த அரசன் அதிசெய்மைக்கண்ணனகாலத்தில் இருந்தவன் என்பது அவ்வாசிரியர் கருத்தென்று தடையறக் கூறலாம். "விஜயராசன்" கி. மு. 543-ம் ஆண்டில் இலங்கைக்குவந்தவன். அக்காலத்தில் இலங்கையின் வடபாகத்திலும் மேற்குப்பாகத்திலும் " நாகர் " என்றசாதியார் பரவியிருந்தமையும், நடுப்பகுதியிலும் கீழ்ப்பாகங்களிலும் "இயக்கர்" என்றசாதியார் பரவியிருந்தமையும் இலங்கையிதிகாசங்களால் *அறியக்கிடக்கின்றன. "விஜயாசன்" காலத்திற் சிங்களக்குடிகள் இலங்கையின் வடக்குக்கரைகளையடுத்துக் குடியேறினரல்லர். "வைபவத்"தின்படி " யாழ்ப்பாடி "யார்காலம் ஒன்பதாநூற்றாண்டுக்கு முந்தினதல்ல. யாழ்ப்பாடியார் மணற்றிடலிருந்த சிங்களவருடன் தாங்கொண்டுவந்ததமிழரைக் குடியேற்றின ரென்ற "வைபவமாலை" யார்கூற்று "கைலாயமாலை"யார்கூற்றோடு முற்றும் முரணுவதாம். மேலும், யாழ்ப்பாடியார் நல்லூரைக்கட்டின யாழ்ப்பாணத்தரசனுக்கு முன்னிருந்தவராயினும் அவர் நெடுங்காலத்துக்குமுன்னிருந்தவரல்லர் என்பது யாழ்ப்பாடியார் இறந்துபோக அரசனின்றி அத்தேசத்திலிருந்த தமிழருக்கும் சிங்களவருக்கு மிடையிற் கலகம் விளைந்ததைக்கண்ட "மழவன்" என்னுமொரு தமிழ்ப்பிரபு மதுரைக்குப்போய் ஓர் அரசனைக்கூட்டிக்கொண்டுவந்தனனென்று "கைலாயமாலை"யிலும் "வைபவமாலை"யிலும் சொல்லியிருப்பதால் விளங்கும். இனி, நல்குரவாற் பீடையுற்ற யாழ்ப்புலவன் ஆளில்லாக் கானகத்தைக் காடுவெட்டி நாடாக்கி வறுநிலப்பரப்பாகியமணற்றிடலுக்குப் போக மனமுள்ளோர் பல்லாயிரவரை அழைத்துச்சென்று அத்தேசத்தரசனென்ற உயர்ந்தபதவியையடைந்தனனென்றசெய்தி யுண்மைப்பாற்பட்டதெனக்கொள்ளுதல் எளிதில் அமையாது.

(தொடரும்.)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை.

---

* Vide The Introductory Chapters to "Mahawamsa"

வண்ணமும் சந்தமும்.

வண்ணமாவது:— பெரும்பாலும் எழுத்துச்செறிந்துநிற்கும் வகையாற் பிறப்பதோர் இசைவேறுபாடு.

அதை இருபதாக வகுத்துரைத்தனர் ஆசிரியர் தொல்காப்பியனார். அவ்விருபதும் பாவண்ணமுதலாக முடுகுவண்ணம் இறுதியாகக் கூறியன. (தொல்...செய்யுளியல்.)

இலக்கணவிளக்கநூலாரும், தொல்காப்பியர்நெறிபற்றி வண்ணங்களை அவ்வண்ணமாகவே இருபதாகப் பகுத்தோதுகின்றனர். (இலக்கணவி - செய்யுளியல்.)

அதைத் தொகையால் ஐந்தும், வகையால் இருபதும், விரியால் நூறுமாய்க்கொள்வர் ஆசிரியர் அமுதசாகரர். அஃது அவர்கூறிய "தூங்கேந்தடுக்கல்" என்ற யாப்பருங்கலக்காரிகைப்பாட்டிற் புலனும். இவ்வாசிரியர், 'அவிநயர்யாப்பை'ப் பின்பற்றி இங்ஙனங் கூறினர்.

நால்வகையானபாக்களையும், அவற்றின் இனங்களையும் புலவர், இவ்வகை இசைவேறுபாட்டிற்கியையப் பற்பலவாறிணைத்துப்பாடிய பாடல்கள் பல வுண்டு; அங்ஙனமமையப்பெற்ற பாக்களை வண்ணப்பா என்று, நால்வகைப்பாவின் இனம்பற்றி ஓதுவர் ஆய்ந்தோர். இவ்வண்ணம் ஒருபாவிற்கே உரியதென்றுகோடல் ஒல்லுமா? அதுபற்றி *"வண்ணப்பா ஆசிரியப்பாவின் இனமே" என்றார்கூற்றுப் பொருந்துமென்றல் ஒருதலையாக்கூற இயலவில்லை. இவ்வண்ணம் தமிழ்மொழிக்கேயுரியது.

சந்தம்:—எழுத்தளவை முதலிய காரணமாகநிகழ்வதோர் இசைவேறுபாடு; அதை இருபத்தாறாகப் பகுத்தோதுவர் என்பர்; அதற்கதிகமாகவும் உண்டென்கின்றனர் சில நுண்ணறிஞர்.

---

* அஷ்டாவதானம். பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் இயற்றிய செய்யுளிலக்கணம் 39ம் பக்கம்.

யாப்பருங்கலவிருத்தியுரைகாரர் நான்கு எழுத்துமுதலாக, இருபத்தாறு எழுத்து ஈறுகவரும் எழுத்தின்கண், சந்தம் பிறக்கும் என்றும், இஃது எழுத்தளவை ஒத்து, குருவும் இலகுவும் ஒத்த அடிகளால்வரும் அளவியற்சந்தம் என்றும், எழுத்தளவை முதலியன ஒவ்வா அளவழிச்சந்தம் என்றும் இருவகைத்தென்றுங் கூறி மேற்செல்கின்றார். இது வடமொழிக்கே யுரியது.

ஆகையால் வண்ணமும் சந்தமும் வேறுவேறியல்பினவென்பதும்,ஒன்றின்பாங்கு மற்றொன்றினுக்கு ஒல்லாதென்பதும் போதரும்.

இவையிங்ஙனமாக நெல்லைவாசியும், சென்றநூற்றாண்டினருமான முருகதாசர் என்னும் இயற்பெயர்பெற்ற ஒரு புலவர்பெருந்தகையார், தாமியற்றிய "வண்ணத்தியல்பு" என்னும் நூலினுள் "வண்ணம் எண்வகைத்து" என்றனர். அது "குலவுசீர் வண்ணங் குணிக்கிலெண் வகைத்தே" என்ற அந்நூலின் தொகையிலக்கணத்து முதற்சூத்திரத்தாற்புலனாகும். பின்னர், அவ்வெட்டின்வகையை, வகையிலக்கணங் கூறுகின்றுழி,

"தத்தவுந் தாத்தவுந் தந்தவுந் தாந்தவுந்
தனவுந் தானவுந் தன்னவுந் தய்யவுந்
தத்தா வென்பத னீடலு மடங்கு
மெண்வகைச் சந்த மென்பார் பெரியோர்"

என்றுகூறிமுடித்தனர்.

எழுத்துநிறை, பொலிவு, இனக்குறிப்பு, அளவியல், அளவழிவு முதலியனபற்றிவரும் இச்சந்தங்கள் வடமொழிக்கன்றோ உரித்தாய்ப் பகுத்தோதவல்லது. தமிழிற் குரித்தாமா? வண்ணத்தியல்பைக்கூறுகின்றவர், அவ்வியலைச் சுட்டிக்கூறாது சந்தத்திற்குரிய இயலைக்காட்டல் நெறியாமா? அல்லது வண்ணமே சந்தம் என்று கொண்டனரா? இரண்டும் ஒன்றா?

அற்றன்று, வடமொழிக்கே யுரித்தாகிய நெறிகளையும், இயல்களையும் காலதேசவர்த்தமானங்கட்கியைய இலக்கியங்களிற்றொகுத்துரைத்தல் பெருவழக்காதலின், இலக்கியங்கண்டதற்கு இலக்கணங்கூறல் முறையென்றதைப் பின்பற்றி, வடமொழிக்கே யுரித்தாகி

'எழுத்துநிறை, குழிப்பின்தொகுப்பு' முதலியவைகளினூற் றெருகு த்துவரும் சந்தத்தைத் தமிழில்யாத்தனர் இவ்வாசிரியர்; அதுபற்றி இங்ஙனம் வழுக்கினூரென்றல் அடாதெனின், உண்மையே; அங்ஙன மாயின், இந்நூற்குச் "சந்தவியல்பு" என்று பெயரிட்டுக்கொள்ள வேண்டும். அஃதிடாது "நூற்பெயர் வண்ணத்தியல்பாம்" (பாயி ரம் 6 சூ) என்று அந்நூலிற் கூறியது வழுவாம் என்க.

ஆதலின், மேற்கூறிய சந்த வண்ணங்களின், இயல்நுட்பமும், வண்ணத்தை வடமொழிச்சந்தமுறைபற்றிப் பகுத்துக் "குழிப்பின் றொகைக்குக் கோடியுஞ் சிறிதே" என்றுரைத்த மொழியின் உண்மை யும், அவைபற்றிய அபிப்பிராயபேதங்களும் ஆராய்ச்சிமுறையில் வெளிவரல் பெரிதும்விரும்பத்தக்கதாம்.

தமிழ்மொழிநிலையம்
திருநெல்வேலி
25-10-13.

இயலாளி.

ஸ்ரீ:

ஆழ்வார்திருநகரிச் சாசநங்கள்.

XV.

சுவாமி நம்மாழ்வார்ஸந்நிதி வடக்குப்ராகாரம் மத்தியபாகம்.

காலம்:—ஜடாவர்மன் குலசேகரதேவற்கு யாண்டு-கந.

விஷயம்:—பொலிஞ்சுநின்றபிரானுக்குச் சிலர் கழுதூர் விற்றுக் கொடுத்தது.

(26) ஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனசக்கரவத்திகள் குல சேகரதேவற்கு யாண்டு கந வதின் எதிர் ஏழாமாண்டு வ்ருஷஹ ந.....................................

(27) ாயற்று கச தியதியும் வ-ஹவ-ஃவக்ஷத்து தூயோடிஸியும் சனிக்கிளமையும் பெற்ற சோதிநாள் திருவழுதிவளநாட்டுத் திருநகரிப் பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத்திலே அமிதகுண வளநாட்டு அக்கிரமகோபநல்லூர் சீராமனுடையானேன் விற்றுக்குடுத்த பூமியாவது ந(ா)ங்கள் குருபரம்பராமுடையோமா

(28) ய் ஆண்டு அநுபவித்துவருகிற கழுதூர் இப்பொலிஞ்சுநின்ற பிரானுக்கு திருவிடையாட்டமாக முன்பே வரியிலிட்டுவந்து கிழ(?)வகை நாடாய்த்திருவாழிக்கல்லுநாட்டிக்குடுத்தமையில் இத்திருவாழிக்கல்லு நாட்டிக்குடுத்த பெருநான்கெல்லைக்குள் பட்ட குளமும் நன்செய் புன்செய்யும் மேனோக்கி

(29) ன மரமுங் கீனோக்கின கிணறும் மீன்படுபள்ளமும் தேன்படு பொதும்பும் உடும்பொடியும் ஆமைக(?)வளியும் புற்று தெற்றியும் நத்தமும் நத்தப்பாழும் சுடுகாடு படுதுறையும் மற்றும் எப்பேற் பட்டினவிலும் என்னேகரிமால் (?) வந்த நாலத்தெ(ான்றும்)ம் விற்றுக்குடுத்தேன் பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத்திலே சீராமனுடையா

(30) னேன் இப்படி விற்றுக்குடுத்த என்னேபாதி நாலத்தொன்றும் எம்மிலிசைந்த விலைப்பொருளெல்லாம் கையிலே அறக்கொண்டு முன்பு இந்நிலமொற்றி..............பிள்ளைபாண்டிய தரையற்கு நானொற்றிவைச்ச வொற்றிகலத்தில் பட்ட ஆநம குடுப்(?).........இவ்வச்சு மூன்றும் உள்பட எம்மிலிசைத்த விலை

(31) கையிலே அறக்கொண்டு விற்று விலைப்ரமாணம் பண்ணிக் குடுத்தேன்...யி பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத்திலே சீராமனுடையானேன்—கையில(ரி)லே நீர்வார்த்துக்குடுத்த இப்படி விற்றுக்குடுத்த என்............மக்கும் இதுவே விலை ஓலை னம பெகு ந(?)—சிலவோலையுமாவிதாகவும். இதுவல்லது வேறு... ....வில்தம்பேரா............

மேலைப்பத்தி.

...........பொருட்செலவோலை காட்டவுங் காணவுங் கடமையின்றி விலைக்குறவிற்று பொருளறக் (கொண்டு) விற்று விலை

ப்ரமாணம் பண்ணிக்குடுத்தேன் பொலிஞ்சுநின்றபிரான் திரு நாமத்திலே சீராமனுடையானேன்.

XVI.

சுவாமி நம்மாழ்வார்ஸந்நிதி பின்ப்ராகாரம் மேல்பாகம்.

(அடியில்)

காலம்:—ஜடாவர்மன் குலசேகரதேவற்குயாண்டு ௰௩.

விஷயம்:—பொலிஞ்சுநின்றபிரானுக்குச் சிலர் கழுதூர் விற்றுக் கொடுத்தது.

(1) ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க் கேழ்விக்குமேல்ஸ்ரீ கோச்சடை

(2) பன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகரதேவற்கு யாண்டு ௰௭ வதி னெதிராமாண்டு ரிஷஹநாயற்றுப் பதினுலாந் தியதியும் பூர்வபக்ஷத்து த்ரயோதசியும் சனிக்கிழமையும் பெற்ற சோதினுள் திருவழுதிவளநாட்டுத் திருநகரி பொலிஞ்சுநி

(3) ன்றபிரான் திருநாமத்திலே அமுதகுணவளநாட்டு அக்கிரம கோபநல்லூர் பொலிஞ்சான்சீராமதேவனை தென்னவன் ஆதிச்சசூளாமணி மூவேந்தவேளானேன் விற்றுக்குடுத்தபூமி யாவது நாங்கள் குருபரம்பரமுடையோமாய் ஆண்டு அனுப வித்துவருகிறகழுதூர் இப்பொலிஞ்சுநின்றபிரானுக்குத்திருவி

(4) டையாட்டமாக முன்பே வரியிலிட்டுவந்து கீழ் (?) வகைநா டாய்த் திருவாழிக்கல்லு நாட்டிக்குடுத்தமையில் இத்திருவா ழிக்கல்லுக்குட்பட்ட பெருநான்கெல்லைக்குட்பட்ட குளமும் நன்செய் புன்செயும் மேனேக்கினமாமும் கீழ்னேக்கினகிணறு மீன்படுபள்ளமும் தேன்படுபொதும்பும் உடும்பொடியும்

(5) ஆமைத உழியும்(?)புற்றுந் தெற்றியும் நத்தமும் நத்தப்பாழும் சுடுகாடும் படுதுறையும் இப்பெருநான்கெல்லைக்குட்பட்ட மற் றும் எப்பேற்பட்டன மானனேசாயில்(?)வந்த நாலத்தொன் றும் விற்றுக்குடுத்தேன் பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத்தி லே பொலிஞ்சான் சீராமதேவனை தென்னவன் ஆதிச்சசூளா மணி

(6) மூவேந்தவேளானேன் இப்படி.........டுத்த என்னேகரி (?) நாலத்தொன்றுக்கும் எம்மில் இசைஞ்ச விலைப்பொருள் ததப பிள்ளைப்பாண்டியதரையற்கு முன்புதான் ஒற்றிவைச்ச ஒற றிக் கலத்தில்பட்ட அச்சு உளு இவ்வச்சு இரண்டேமுக்காலும் விலைப்பொருளாகச்சாத்தி மற்றும் எம்மிலிசைஞ்ச விலை பொரு ளெல்லாம்

(7) கையிலே யுறக்கொண்டு விற்று விலைவு மாணம் பண்ணிக்குடுத் தேன் பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத்திலே பொலிஞ்சான் சீராமதேவனுன ஆதிச்சசூளாமணி மூவேந்தவேளானேன் இப்படி—குடுத்த என்னேகரி (?) நாலத்தொன்றும் இதுவே விலையோலையும் பொருள் செலவோலை

(8) யுமாவிதாகவு இதுவல்லது வெவவி(?)மாவறுதி பொருளாசறு திப் பொருள்செலவோலை காட்டவுங் காணவுங் கடமையின்றி விலக்குறவிற்றுப் பொருளறக்கொண்டு விற்று விலைப் பிரமா ணம்பண்ணிக்குடுத்தேன் பொலிஞ்சுநின்றபிரான் திருநாமத் திலே பொலிஞ்சான்சீராமதேவனுன தென்னவன் ஆ

(9) திச்சசூளாமணி மூவேந்தவேளானேன் இப்படி சம்மதித்து இக்குளத்தில் திருவாழிக்கல்லுக்குள்ளு என்னேகரி (?) நா லொத்தொன்றும் விற்றுக்குடுத்தேன் சீராமதேவனுன தென் னவன் ஆதிச்சசூளாமணிமூவேந்தவேளானேன். இவை என் னெழுத்துபட்ட அறிவேன் கோள்புலிக்குட்டி.........இப்படி

(10) அறிவேன் சீராமனுடையானெழுத்து. இப்படிக்கு இவை உய்யவந்தான்பட்டன் எழுத்து. இப்படி அறிவேன் அரையன் குலசேகரனுன தென்னவன் கலிங்கதரையன் எழுத்து. இவை அறந்தாங்கி கணவதி எழுத்து. இப்படி அறிவேன் சீராமதேவ சக்கரபாணி எழுத்து. இவர்கள் சொ(ன்ன) இவ் விலைப் பிர மாணம் எழுதினேன் பெருமாள் திருவாசல் ஆரியபட்டகளில் மாதவன் வாஸுதேவன் எழுத்து.

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

நேஷநல்-ஹை-ஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

விதையெடுத்தலும் விதையடித்தலும்.

ஆண்மிருகங்கள் பொலியலாயக்கில்லாதுபோய் இனத்தைப் பெருக்காமலிருக்கும்பொருட்டு இச்சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விதையெடுத்தல்என்றால் மிருகங்களின் பீஜங்களையே எடுத்துப்போடுவது. ஆதலால் அதிற்கைதேர்ந்தவர்களல்லாதவர்கள் அதைச்செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விரையடித்தல் என்பது விதையையாவது இந்திரியநாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவதுஎடுத்துப்போடாமல் அழித்துப் பிராணிகளைப் பொலியச்சக்தியில்லாமற்செய்தலாம். விதையடித்தல் (காயடித்தல்) என்னும் கொடிய செய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அதைச் செய்யும் விதத்தைக்குறித்து விரித்துச்சொல்லவேண்டியதிராது. இத்தேசத்திற் கிராமாந்தரங்களிற் செய்துவருவது எப்படியென்றால் விதை கூழாய்ப்போகும்வரை அதை அடித்து நசுக்கி இளக்கிவிடுகிறார்கள் என்றே சொல்லலாம். இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிறவரையில் அந்தப்பிராணியானது பொறுக்கமுடியாத வேதனைப் பட்டுக்கொண்டேயிருக்கும். மிருகங்களைவசக்கி மனிதனுக்கு வேண்டிய வேலைகளைச் செய்விக்கவேண்டுமானால் இப்படி யேதாவதொன்றைச் செய்துதான் தீரவேண்டுமென்பதைக் கவனிக்கவேண்டும். சென்ற சிலவருடங்களுக்குமுன் சாஸ்திரப்படி விதையெடுக்கத்தெரிந்தவர்கள் ஏதோ சில பெரியநகரங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக்காலத்தில் விதையடிக்கக் கொஞ்சம் நியாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்றவிஷயங்களிற் பயிற்சியிருப்பதுபோல "விதையெடுப்பதிலும்" தேர்ச்சி உள்ள கால்நடைவைத்தியர் ஒருவரையாவது சர்க்காரில் நியமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் காயடிக்க விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு. விதையடிப்பதைவிட்டு "விதை எடுத்தலினால் உண்டாகும் முக்கியமான நன்மைகள் கீழே சுருக்கமாய்க் குறிக்கப்பட்டுள்ளன:—

(1) விதையடிக்க அரைமணி செல்லும். விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு 5 நிமிஷத்துக்குமேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும்போது விதை எடுப்பதனால் 14 நாளில் நன்றாய் வாசியாய்விடும். மற்ற மாடு ஆடானால் விதை எடுத்தவுடனே மந்தையிற்பற்றி விட்டுவிடலாம். பின்பு அதைப்பற்றிக் கவனிக்கவேண்டியதேயில்லை. விதை அடித்த வேதனை தீர்ந்து வாசியாக அநேகவாரம் செல்லும். அநேக சமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்தப் பிராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் பிராணிகள்படும் துயரத்தைப்பார்த்துச் சற்று முந்தியே விட்டுவிடுவதால் நமது உத்தேசம் சில சமயங்களில் நிறைவேறுகிறதில்லை. அப்போது அது சரியானபடி பொலியமுடியாதுபோனாலும் (கள்ளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந்தொல்லையாயிருந்துவரும்.

(4) இந்த சிகிச்சை சீக்கிரத்தில் முடிந்துபோகிறதினால் இத்தேசத்தில் விதை எடுக்கப்போகும் பிராணிகளுக்கு (மயக்கந்தர) க்ளோரபாரம் என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிறபக்ஷத்தில் கால்நடை வைத்தியர் அந்தப்படிசெய்வார். அப்போது அந்தமிருகங்களுக்குச் சற்றும் வருத்தம் தோற்றாது போகும். இரண்டு வயசாகிறவரையில் மிருகங்களுக்குக் காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்திலிருந்து வருகிறது. அநேக சமயங்களில் 3 அல்லது 4 வயசு வரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப்போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்றால் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில்புறமும் கனத்து லட்சணமில்லாமல் போகிறது. இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்குப் போகும் சத்து நாலாபக்கமும் சமமாய்ப்பரவி அது உயர்ந்து வளர்ந்து வயது வரும்போது சாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய மிருகங்களுக்குக் காயெடுக்கவேண்டிய வயது கீழே குறிக்கப்பட்டிருக்கிறது:—

குதிரை கழுதைகளுக்கு	...	1 முதல் 2 வயது.
மாடு ...	...	3 மாதம் முதல் 1 வருஷம்.
ஆடு, வெள்ளாடு	...	1 முதல் 3 மாதம்.

முன்சொல்லியபடி பிரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்தியரையாவது நியமித்திருக்கிறார்கள். அவரைத் தாலூக்காவுக்கு ஒரு மாதமாகத் தனக்கேற்பட்டிருக்கும் தாலூக்காக்கள்தோறும் சுற்றிவரத்திட்டம் செய்திருக்கிறார்கள். அவர் 4 முதல் 6 மாதத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு தாலூக்காவுக்கும் வருவார். எந்த கிராமத்தாருக்காவது விதை எடுக்கவேண்டிய கால்நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ள வேண்டியது. அவர் கால்நடை வைத்தியரை அந்த கிராமத்திற்குப்போக எழுதிவிடுவார்.

எப். வேர்,

ஸிவில் வெடரினரி சூபரின்டாண்டு,

Department of Agriculture, Madras.

பண்ணையாட்களை வேலையிற் பழக்குதல்.

விவசாய டிபார்ட்மெண்டார் அங்கங்கே ஏற்படுத்தியிருக்கும் சர்க்கார்ப் பண்ணைகளில் குறிப்பிட்ட எண்ணம் வரையில் தாமேபயிரிடும் குடியானவர்களையும், மேஸ்திரிகளையும், பண்ணையாட்களையும் குறிப்பிட்ட சில விவசாயவேலைகளையும், விவசாயத்திற்கு உதவும் லேசான மெஷீன்களை உபயோகிக்கவும் பழக்கிவைப்பார்கள் என்பது வெகுவாய் அநேகருக்குத் தெரியாதென்று தோற்றுகிறது.

லாபமானது என்று சொல்லத்தகுந்த முறைகளைக் குடியானவர்கள் மனதில் படும்படிசெய்வதற்குச் சிறந்தவழி அவன் நிலத்திலேயே அதைச்செய்து காட்டுவதுதான். இந்தப்பிரகாரமே விவசாய டிபார்ட்மெண்டார் விசேஷமாய்ச் செய்துவந்திருக்கிறார்கள். இனியும் அப்படியே செய்வார்கள். சிலருக்கு சர்க்கார்ப் பண்ணைகளிலும் வேலை பழக்கித் தருவார்கள்.

நிலச்சுவான்கள் பொறுக்கியெடுத்த சில பண்ணையாட்களை அனுப்பி அப்படி வேலை பழக்கிவைத்துக்கொள்ள இஷ்டப்படவும் கூடும். பூமிகளில் பாடுபட்டுப் பண்ணைவேலைகளில் பழக்கமுள்ளவர்களாயும் சர்க்கார்ப் பண்ணையிலிருக்கும் கூலிகளோடு கூலியாய் வேலைசெய்யக் கூடியவர்களாயும் இருப்பவர்களை மட்டுமே வேலை பழக்கச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

சர்க்கார்ப் பண்ணைகளிலிருந்து வரும்போது அதை மேல்பார்த்து வரும் மானேஜர், அஸிஸ்டாண்டு மானேஜர் முதலியவர்களுக்கு அடங்கி நடப்பதோடு இட்ட வேலைகளைச் சுறுசுறுப்பாயும் ஒழுங்காயும் செய்துவரவேண்டும். அப்படிச்செய்யாதுபோனால் வேலை பழக

ஏற்பட்டகாலம் முடியுமுன்னமேயே பிரின்சிபால் துரை அவர்களா வது டிப்டி டைரக்டர் துரை அவர்களாவது போகச்சொல்லிவிடு வார்கள்.

அவர்கள் தங்கள் வழிச்செலவை அவர்களே போட்டுக்கொள்வ தோடு குடியிருக்க இடமும் தேடிக்கொள்ளவேண்டும். ஆனால் அவர்கள் செய்யும் வேலைக்கு பாரத்தில் (பண்ணையில்) கூலிகொடுப் பதுபோலவே கூலிகொடுத்துவிடுவார்கள். பொதுவாய் ஆயில் இன் ஜின் மோடார் (oil-engine motors) இவைகளை ஓட்டுவிக்கக் கற்றுக் கொடுக்கிறதில்லை. வேலை பழக்குவதைக்குறித்த விவரம் கீழே கண் டிருக்கிறது.

இடம்.	பழக்குவிக்கும் வேலையின் விவரம்.	கற்றுக்கொடுக்கப் பிடிக்கும் காலம்.
	உழவு; மண்ணைப்பிறட்டும் சிற குள்ள இரும்புக்கலப்பைகளைத் தகுந்தபடி உபயோகிக்க.	ஒருமாசம்—எருதுகளையும் பழக்க அனுப்பலாம்.
	விதைக் கலப்பை (கொர்ருக் கலப் பை) யால் விதைக்க.	ஒருமாசம்—ஆகஸ்டு 15 முதல் செப்டம்பர் 15 வரை.
	வெல்லம் காய்ச்சுதல்.	ஒருமாசம்—ஏப்ரல் அல் லது மே.
கோயமுத்தூர்.	நெல் நாற்றுநட; நாற்றங்கால் தயா ர்செய்து நாற்றுப்பாவி ஒற்றை நாற்றுய் நடவும் பசுந்தாள் உரப் பயிர் சாகுபடி செய்யவும்.	இரண்டுமாசம்—ஏப்ரல் முதல் ஜூலை வரை.
	ஆண்பிள்ளை ஆட்களோடு அவர் கள் வீட்டுப் பெண்பிள்ளை ஆட் கள் வந்தால் ஒற்றைநாற்றுநட வும் தூற்றுகிற மெஷீன் வேலை யும் பழக்குவார்கள்.	
ஹகரி (பல்லாரி ஜில்லா).	ஏரங்காடு என்று சொல்லும் கரிசல் நிலத்துக்கேற்ற இரும்புக் கலப் பைகளைக்கொண்டு உழப்பழகல்	இரண்டுமாசம்—ஜனவரி, பிப்ரவரி.
	சோளத்திற்குக் கரிப்பான் நோய் வராதபடி சோளவிதையைப் பாடம் செய்ய.	எக்காலத்திலும் அது தெ ரிகிற மட்டும்.
நந்தியால் (கர் நூல்ஜில்லா).	ஹகரிக்குச் சொன்னபடியே.	

சாமல்கோட்டா (கோதாவரி ஜில்லா).	நெல்; நாற்றங்கால் தயார்செய்து நாற்றுப்பாவி பிடுங்கி ஒற்றை நாற்றாய் நடவும் பசுந்தாளூரப் பயிர்களைச் சாகுபடிசெய்யவும்.	மூன்றுமாதம்—மே, ஜூன், ஜுலை.
	கரும்பு; வெல்லம் செய்யவும் கரும்பை வரிசையாய் நட்டுப்பயிரிடும் முறையைப் பழகவும்.	இரண்டுமாதம்—பிப்ரவரி முதல் எப்ரல் வரை.
பாலூர் (தென் ஆற்காடு ஜில்லா).	(1) விதைபொறுக்கி எடுத்தல்.	ஒருவாரம்—ஆகஸ்டு, செப்டம்பர்.
	(2) சிந்துக்கலப்பையால் உழுதல், சாம்ஸன் ஆரம் என்று சொல்லும் முள்ளுப்பலுகால் பலுகடித்தல்.	ஜனவரி, பிப்ரவரி மாசங்களில் ஜூன், ஜுலை மாசங்களில் ஒருவாரம்.
	(3) கரும்பு நடல்.	மார்ச்சுமாசம் இரண்டுவாரம்.
கோயில்பட்டி. (திருநெல்வேலி ஜில்லா).	(1) கரிசல் கலப்பை என்று சொல்லும் இரும்புக்கலப்பையைச்சரியானபடி பூட்டவும் உழவும் பழக.	கோடையில் அதாவது மே, ஜூன், ஜுலைமாசங்களில் இரண்டுவாரம்.
	(2) கொர்ருக் கலப்பை விதைப்புக்கேற்ற கருவிகளை உபயோகப்படுத்திப் பழக,	செப்டம்பர், அக்டோபர் மாசங்களில் ஒருமாசம்.
	(3) மாட்டுக் களைவெட்டியால் களை வெட்ட (அதாவது தந்துலடிக்க.)	டிசம்பர், ஜனவரி மாசங்களில் இரண்டுவாரம்.
தளிப்பரம்பா. (மலையாளம் ஜில்லா.)	கரும்பு ஆலை ஆடி வெல்லம் காய்ச்சும் முறைகளைப்பழக. இப்போதே ஆலை அடுப்புக் கட்டும் விதத்தையும் பழக்குவார்கள்.	ஜனவரியில் ஒரு மாசம்.

கோயமுத்தூர் காலேஜில் சேருகிறவர்கள் அந்தக் காலேஜ் பிரின்சிபால் துரையவர்கட்கும், ஹகரி, நந்தியால், சாமல்கோட்டை முதலிய இடங்களில் சேருகிறவர்கள் பல்லாரியிலிருக்கும் வடபாகம் விவசாய டிப்டி டைரக்டர் துரையவர்கட்கும், பாலூர், கோயிற்பட்டி, தளிப்பரம்பா இவைகளில் சேருபவர்கள் திருச்சினாப்பள்ளியிலிருக்கும் விவசாய டிப்டி டைரக்டர் துரையவர்கட்கும் மனுச்செய்துகொள்ள வேண்டும். எப்போது ஆள்களைச் சேர்க்கமுடியும் என்பதையும் அவர்களுக்கு வேண்டுமானால் குடியிருக்க இடத்தையும் குறித்து அவர்களுக்கு எழுதினால் எழுதுவார்கள்.

மதராஸ்,
1913-ம் ௵ மேமீ 13உ

D. T. சாட்லீக்,
டைரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர்.